1982 மார்ச் 30]

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நம்முடைய திரைப்படக் கழகத்திற்கு இவ்வளவு நஷ்டம் என்று சொன்னார்கள். எவ்வளவு பேர்களுக்குக் கடன் கொடுக்கப் பட்டது. எவ்வளவு பேர்கள் நியாயமாகக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைத்தான் முன்னாலேயே சொன்னேன். 81 பேர் களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 87,25 இலட்சம் வழங்கப் பட்டது. 74 அரங்குகள் கட்டி முடித்து நடைபெற்றுக் கொண்டி ருக்கின்றது. இப்போது 31–12–1981 நிலவரப்படி, 65.25 லட்சம் பாக்கியாக இருக்கின்றது.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்ட மன்ற உறுப்பினர்களை இழிவு செய்யும் வகையில் திரைப்படங்கள் வந்திருப்பதாக இங்கே புகார் சொல்லப்பட்டது. அதற்குப் பதிலாக சட்டமன்ற உறுப்பினர்கள் படம் எடுத்தால் அதற்குத் திரைப்படக் கழகம் உதவி செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இது திரைப்பட அரங்குகள் கட்ட நிதி உதவி செய்கின்ற அமைப்புதான்.

திரு. கெ. சொக்கலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கொடுக்கப்பட்ட கடன் நிறுத்தி வைக்கப்பட்டிருப்ப தாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி கொடுக்கப் பட்ட கடனிலே தாழ்த்தப்பட்டவர்கள் யாருக்காவது கொடுக்கப் பட்டிருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, அந்த விவரம் என்னிடத்திலே இல்லை.

சேலம் மாவட்டத்தில் விதைப் பண்ணை ஆரம்பிக்கும் திட்டம்.

*வினா எண். 684—திரு. செ. செம்மலை: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) விவசாய வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் சேலம்மாவட்டத்தில் எந்த இடத்தில் விதைப்பண்ணை நிலையம் ஆரம்பிக்கப்பட இருக்கிறது?

(ஆ) அது எப்போது முதல் செயல்படத் தொடங்கும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) சேலம் மாவட்டத் தில் புதிதாக அரசு விதைப் பண்ணை ஆரம்பிக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கிடமில்லை.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் சீதோஷ்ண நிலை வளத்திற்கு ஏற்ப அங்கே பயிரிடக்கூடிய பயிர்களின் விதைகளை, சேலம் மாவட்டத்தில் டேனிஷ் பேட்டையில் வேளாண்மைத் துறையால் கையகப்படுத்தப்பட்ட 100 ஏக்கர் நிலத்தில் இனியாவது ஒரு விதைப் பண்ணை வைக்கும் செயற்குறிப்பினை அரசு ஆராயுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே. டேனிஷ் பேட்டையில் ஏற்கெனவே விதைப்பண்ணைஇருக்கின்றது அது போக மேட்டூர் அணை, முள்ளவேடு ஆகிய 2 பகுதிகளிலும் விதைப்பண்ணைகள் இருக்கின்றன. ஆக 3 இடங்களில் சேலம் மாவட்டத்திலே இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 685, 686, 687, 688 ஆகியவை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

சென்னையிலுள்ள ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப் பெறும் மாணவர்கள் எண்ணிக்கை

*வினா எண் 689—திரு. வேடச்சந்தூர் வி.பி.பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் ஆண்டுதோறும் எத்தனை மாணவர்கள் சேர்க்கப் படுகிறார்கள்?

(ஆ) சேர்க்கும் மாணவர்கள் எண்ணிக்கையை உயர்த்த அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) (21).

(ஆ) இம் மாநிலத்தில் ஹோமியோபதி மருத்துவமனையின் முன்னேற்றத்தைப் பொருத்து இது குறித்து ஆலோசிக்கப் படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் சேருகின்ற மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு அரசு முயற்சி எடுக்கும்போது, தென் மாவட்டங்களில் உள்ள மாணவர்கள் படிக்கின்ற வகையில் அப்படி நிறுவப்படுகின்ற கல்லூரியை மதுரைப் பகுதியிலே நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, When particulars about buildings were called for,